# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA6129/F/2023**

திரு. சாமி வேலாயுதம் … மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
முகையூர் (இ) மணம்பூண்டி,
விழுப்புரம் மாவட்டம் - 605 759. … பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **18/01/2023** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **18/02/2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **30/03/2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு. சாமி வேலாயுதம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி T.பவனேஸ்வரி, பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், முகையூர் (இ) மணம்பூண்டி, விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 18/01/2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், மனம்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் 2022 மார்ச் மாதம் வரை மற்றும்

ஜூன் மாதம் வரை செலவு செய்யப்பட்டுள்ள செலவின பட்டியலின் படி (படிவம் 30) பக்கம் 1ல் வ.எண் 10, 14, 15, 16, 29, 30, 31 பக்கம் 2இல் வ.எண் 2 மற்றும் 2022 ஜூலை மாதம் முடிய செலவின பட்டியலின் படி வ.எண் 14, 16, 18, 32, 35, 26, 27 என்பது போன்ற தகவல்களை தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 18.02.2023 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 30.03.2023 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 08.09.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், மனுதாரரும் 08.09.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக தான் முழுமையான தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக தெரிவித்துள்ள கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்..

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டதை மனுதாரரின் ஒப்புதல் கடிதத்தின் மூலம் தெரிய வருகிறது. அதனடிப்படையில், ஆணையம் ***இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA6129/F/2023</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
முகையூர் (இ) மணம்பூண்டி,
விழுப்புரம் மாவட்டம் - 605 759.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு. சாமி வேலாயுதம், த/பெ. சாமிக்கண்ணு,
எண்.2/322, அன்னை இல்லம், புலவர் வீதி,
புது நகர் - மணம்பூண்டி & அஞ்சல்
விழுப்புரம் மாவட்டம் - 605 759

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025